TNED040090252025

Presented on : 04-02-2022
Registered on : 13-10-2025
Decided on : 16-04-2026
Duration : 4 years, 2 months, 12 days

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எண்.2, ஈரோடு.**

முன்னிலை : **திரு.செ.ராஜ்குமார், பி.ஏ., பி.எல்.,**
நீதித்துறை நடுவர் எண்.2, ஈரோடு.

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் சித்திரை மாதம் 03–ம் நாள்
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ம் நாள் வியாழக்கிழமை

**சுருக்கு வழக்கு எண். 1975/2025**
**CNR.No. TNED040090252025**

K. செந்தில் குமார் ......... புகார்தாரர்

/எதிராக/

M. ராமச்சந்திரன் ......... எதிரி

இவ்வழக்கானது ஈரோடு விரைவு நீதிமன்றம் –1ல் STC 91/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற அறிவிப்பு ROC.No.505/A/2021G3 நாள் 07.07.2025–தேதிய உத்தரவின்படி இந்த நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு STC–1975/2025 ஆக 13.10.2025ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, புகார்தாரர் தரப்பில்



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.16 17:52:12 +0530

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.வெள்ளியங்கிரி, M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சக்திவேல், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும், இவ்வழக்கு ஆவணங்களையும் ஆய்வு செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

இந்த தனிப்புகாரானது புகார்தாரரால், மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 மற்றும் 142–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

1) கடந்த 06.06.2021ம் தேதியன்று இவ்வழக்கின் எதிரி அவரது அவசர செலவுக்காக ரூ.2,80,000/–ஐ (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பதாயிரம்) புகார்தாரரிடம் கடனாக பெற்றதாகவும், மேற்படி கடன் தொகைக்கு 18 சதவீதம் வட்டி கொடுப்பதாக உறுதி கூறியதாகவும், மேற்படி கடனை தீர்க்கும் பொருட்டு 12.12.2021ம் பின் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இண்டியா, சத்தியமங்கலம் கரட்டுர் ரோடு கிளையின் ரூ.2,80,000/–ற்கான காசோலை எண்.692046ஐ கொடுத்ததாகவும், எதிரி கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்படி காசோலையை கடந்த 10.01.2022ம் தேதியன்று ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியா, பழனியப்பா வீதி, ஈரோடு கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்ததாகவும், மேற்படி காசோலை "Funds Insufficient and Drawer's signature incomplete / illegible / differs / required" என 10.01.2022ம் தேதியன்றே திருப்பப்பட்டதாகவும், பின்னிட்டு புகார்தாரர் 10.01.2022ம் தேதி அவரது வழக்கறிஞர் மூலம் எதிரியின் வீடு மற்றும் அவர்



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.16 17:52:21 +0530

பணியாற்றும் பள்ளி ஆகிய இரண்டு முகவரிகளுக்கும் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பு எதிரிக்கு பள்ளி முகவரியில் 12.01.2022ம் தேதி சார்வு செய்யப்பட்டதாகவும், எதிரியின் வீட்டு முகவரிக்கு அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாததால் No such person என்ற காரணத்திற்காக 13.01.2022 அன்று திருப்பப்பட்டதாகவும், எதிரி இதுவரையில் காசோலைக்கு உண்டான பணமோ பதில் அறிவிப்போ திருப்பிக் கொடுக்கவில்லை என்றும், மேற்படி எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும் என்றும், எனவே மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138–ன் கீழ் எதிரிக்கு தண்டனை வழங்கி, புகார்தாரருக்கு இழப்பீடு தொகை வழங்க உத்தரவிட வேண்டி புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கானது சுருக்கு வழக்கு எண்.1975/2025 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச.207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிரிக்கு போதிய அவகாசம் கொடுத்து கு.வி.மு.ச பிரிவு 251–ன் கீழ் குற்ற முகாந்திரம் பற்றி எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது, எதிரி **"பொய்வழக்கு. இந்த வழக்கிற்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை"** என்றும், **"என்னுடைய காசோலை தான் ஆனால் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. நான் ஒரு Teacherக்கு Chequeஐ Plain ஆக கொடுத்திருந்தேன்"** என்று கூறியதால், தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.16 17:52:27 +0530

3) புகார்தாரர் தரப்பில், புகார்தாரர் எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். புகார்தாரரின் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலமானது, புகார்தாரர் தாக்கல் செய்துள்ள எழுத்துமூலமான புகாரை பிரதிபலிக்கும் வகையில் உள்ளது. புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களாக பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பு.சா.1 சாட்சியத்துடன் புகார்தாரரின் சாட்சியம் முடிக்கப்பட்டது. புகார்தாரர் தரப்பு சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்களை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி பொய் சாட்சி என்று மறுத்து, தனது தரப்பில் விசாரிக்க சாட்சியுள்ளதாக கூறினார். ஆனால் எதிரி தரப்பில் எதிரி தன்னை சாட்சியாகவோ, தனது தரப்பில், மற்ற சாட்சியங்களை விசாரிப்பதற்கும் போதிய நடவடிக்கையை எடுக்கவில்லை என்பதோடு, புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்த மனு CMP 03/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்ட பின்னிட்டும், பு.சா.1ஐயும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

4) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வழக்கு காசோலை சட்டப்படி தீர்க்கப்பட வேண்டிய கடனுக்காகவோ அல்லது பொறுப்புக்காகவோ கொடுக்கப்பட்டதா? என்பதே ஆகும்.

5) புகார்தாரர் தரப்பில், எதிரி புகார்தாரருக்கு தெரியும் என்றும், எதிரியின் அவசர தேவைக்காக 06.06.2021ம் தேதியன்று ரூ.2,80,000/– ஐ கடனாக பெற்றார் என்றும், மேற்படி தொகைக்கு 18 சதவீதம் வட்டி கொடுப்பதாக உறுதி கூறியதாகவும், மேற்படி கடன் தொகைக்கு எதிரி பின்



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.16 17:52:33 +0530

தேதியிட்ட பு.சா.ஆ.1 காசோலை புகார்தாரருக்கு வழங்கியதாகவும், அதை புகார்தாரரும் தனது வங்கி கணக்கில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது, "Funds Insufficient and Drawer's signature incomplete / illegible / differs / required" என்ற குறிப்புடன் பு.சா.ஆ.2 திருப்பப்பட்டுள்ளதால், எதிரிக்கு பு.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டு, எதிரியின் பள்ளி முகவரியில் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதற்கான பு.சா.ஆ.4 அஞ்சலக ஒப்புகை அட்டை மற்றும் எதிரியின் வீட்டு முகவரிக்கு அனுப்பபட்ட வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை பு.சா.ஆ.5 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதிலிருந்து, எதிரி புகார்தாரரிடம் பெற்ற கடனுக்கு ஆதரவாக பு.சா.ஆ.1 காசோலை வழங்கப்பட்டு மேற்படி காசோலை போதிய பணமில்லை மற்றும் கையெழுத்து மாறுபாடு ஆகிய காரணங்களுக்காக திருப்பப்பட்டுள்ளதை, புகார்தாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும் எதிரி தரப்பில் அதை மறுத்து போதிய சாட்சியம் அளிக்கவில்லை என்பதனாலும், எதிரிக்கு தண்டனை வழங்கி, காசோலையில் கண்டுள்ள தொகையை இழப்பீடாக செலுத்த உத்தரவிடக்கோரி கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

6) எதிரி தரப்பில் வாதுரை செய்யப்படவில்லை.

7) புகார் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி, அவசர செலவுக்காக ரூ.2,80,000/-ஐ கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு எதிரி 12.12.2021-ம் தேதியிட்ட பு.சா.ஆ.1 வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்துள்ளார். பு.சா.ஆ.1 வழக்கு



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.16 17:52:39 +0530

காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு, "Funds Insufficient and Drawer's signature incomplete / illegible / differs / required" என்ற குறிப்புடன் திருப்பப்பட்டுள்ளதாக பு.சா.ஆ.2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு காசோலை பு.சா.ஆ.1 திருப்பப்பட்டுள்ளது சம்பந்தமாக பு.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டு, எதிரிக்கு மேற்படி அறிவிப்பு அவரது பள்ளி முகவரியில் சார்வு செய்யப்பட்டதற்கான பு.சா.ஆ.4 அஞ்சல் ஒப்புகை அட்டை மற்றும் எதிரியின் வீட்டு முகவரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை பு.சாஆ.5தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, வழக்கு காசோலையில் கண்டுள்ள தொகையை திருப்பி செலுத்தாததோடு, வழக்கு காசோலையை மறுத்து பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பப்படாததால் எதிரிக்கு உரிய தண்டனை வழங்க கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

8) மேலும் இந்த வழக்கில் எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜரான பின்பும், புகார்தாரர் தரப்பு வழக்கை மறுதலித்து பு.சா.ஆ.1.ல் உள்ள கையெழுத்தை எதிரி குறிப்பிட்டு மறுக்கவில்லை என்பதிலிருந்து, பு.சா.ஆ.1 காசோலையை புகார்தாரர் தனது வங்கி கணக்கில் வசூலுக்கு தாக்கல் செய்து பு.சா.ஆ.2 மூலம் வழக்கின் காசோலை "FUNDS INSUFFICIENT AND DRAWER'S SIGNATURE INCOMPLETE / ILLEGIBLE / DIFFERS / REQUIRED" என்ற குறிப்புடன் திருப்பப்பட்டிருப்பதிலிருந்தும், புகார்தாரரிடமிருந்து பெற்ற சட்டப்படியான கடனுக்காகத் தான் எதிரி, புகார்தாரரிடம் வழக்கு காசோலை பு.சா.ஆ.1ஐ கொடுத்துள்ளதாக இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது.



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.16 17:52:45 +0530

9) மேலும், மாண்பமை உச்சநீதிமன்றம் **Rangappa – Vs – Mohan** என்ற வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளான,

a) Legally enforceable debt

b) The Cheque was drawn from the account of bank for discharge hold or in pay of any or other liability.

c) The cheque so issued had been returned due to insufficient funds.

என்ற மூன்று ஆக்கக்கூறுகளையும் நிரூபிக்கப்பட்டால்தான் வழக்கு காசோலையானது சட்டப்படி தீர்க்க வேண்டிய கடனுக்காக கொடுக்கப்பட்டிருக்க முடியும் என்று மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139–ன்படி அனுமானம் கொள்ள வேண்டும் என்று மேற்படி முன்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்படி உச்சநீதிமன்ற தீர்ப்பில் சொல்லியுள்ள சங்கதிகளின்படி பு.சா.ஆ.1 ஆனது "FUNDS INSUFFICIENT AND DRAWER'S SIGNATURE INCOMPLETE / ILLEGIBLE / DIFFERS / REQUIRED" காரணமாகவே பு.சா.ஆ.2–ன் மூலம் திருப்பப்பட்டுள்ளது என்பதிலிருந்து, புகார்தாரர் தனது தரப்பு மெய்ப்பிக்கும் சுமையை நிரூபித்துள்ளார் என்று இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. இருந்தபோதிலும், புகார்தாரர் மெய்ப்பித்த சங்கதிகளை மறுதலித்து, எதிரி தனது தரப்பு வழக்கை சாத்தியக்கூறு அடிப்படையில் (Prepondenrance of probabilities) மெய்ப்பித்துள்ளாரா என்பதை சாட்சியங்களின் அடிப்படையில் காண வேண்டியது அவசியமாகிறது.

10) மேலும் எதிரி தரப்பில், கு.வி.மு.ச பிரிவு 251–ன் கீழான வினாவின்போது **"பொய்வழக்கு. இந்த வழக்கிற்கும், எனக்கும் சம்பந்தம் இல்லை"** என்றும், **"என்னுடைய காசோலை தான் ஆனால் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. நான் ஒரு Teacherக்கு Chequeஐ Plain**



S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.04.16 17:52:52 +0530

**ஆக கொடுத்திருந்தேன்"** என்றும், 313(1)(ஆ)–ன் கீழான வினாவின்போது எதிரி வழக்கு காசோலை பு.சா.ஆ.1 யை குறிப்பிட்டு மறுக்காமல் **"பொய்சாட்சி"** என முரணாக கட்சி செய்துள்ள நிலையில், மேற்படி சங்கதியை நிரூபணம் செய்வதற்கு எதிரி தரப்பில் போதிய சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தவில்லை.

11) ஆகவே, எதிரி பு.சா.ஆ.1ல் உள்ள கையொப்பத்தை மறுக்காத நிலையிலும், புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை மறுதலித்து எதிரி தரப்பில் சாட்சிகளை விசாரிக்க வேண்டியது அவசியம் இல்லை என்றாலும் கூட வழக்கு காசேலை குறித்து சட்ட அறிவிப்பு அனுப்பிய பின்பும், அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்பதோடு, நீதிமன்ற விசாரணையின்போது வேறு நபருக்கு வெற்று காசோலை கொடுத்ததாக எதிரி கட்சி செய்துள்ள நிலையில், அந்த காசோலை புகார்தாரருக்கு எவ்வாறு கிடைத்தது என்று புகார்தாரர் வழக்கை மறுதலித்து முரண்படுத்தி பொய்பிப்பதற்கும், எதிரி தரப்பில், போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

12) ஆகவே வழக்கு காசோலையானது எதிரியால் புகார்தாரருக்கு சட்டப்படியாக நிறைவேற்றக்கூடிய கடன் அல்லது கடப்பாட்டிற்காக நிறைவேற்றி கொடுக்கப்படவில்லை என்பதை, போதுமான சாட்சிய, சான்றாவணங்களைக் கொண்டு நிகழக்கூடிய சாத்தியக்கூறுகளின் மேம்பட்ட நிலையின் அடிப்படையில், எதிரி தரப்பில் மறுத்தலிக்கப்பட்டு மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 118 மற்றும் 139 கீழான



S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.16 17:52:58 +0530

அனுமானங்களை முரண்படுத்தி மெய்ப்பிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) எதிரி தன்னுடைய வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த பொருண்மை ஏற்பட்டு இருக்க சாத்தியக்கூறுகள் இருந்தாலே போதுமானது. அவ்வாறு எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தபட்ட பொருண்மையானது சாத்தியக்கூறு அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, மெய்ப்பிக்கும் பொறுப்பானது புகார்தாரரின் மீது எதிரியால் மறுக்கத்தக்க சாட்சியங்கள் (Rebuttal Evidence) மற்றும் நிகழத்தக்க சாத்தியகூறுகளின் (preponderance of probabilities) வாயிலாக நிரூபித்து மீண்டும் புகார்தாரர் வசம் மெய்ப்பிக்கும் சுமையானது திருப்பப்படவில்லை (Reverse Burden) என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) ஆகவே, வழக்கு காசோலை பு.சா.ஆ.1 ஆனது புகார்தாரருக்கு சட்டப்படியாக நிறைவேற்றக்கூடிய கடன் அல்லது கடப்பாட்டிற்காக நிறைவேற்றி கொடுக்கப்படவில்லை என்பதை போதுமான சாட்சிய, சான்றாவணங்களை கொண்டு நிகழத்தக்க சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையின் அடிப்படையில், (preponderance of probabilities) எதிரி தரப்பில் வாதம் எழுப்பப்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 118(a), 139–ன் கீழான சட்ட அனுமானங்களை முரண்படுத்தி மெய்ப்பிக்கவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி என தீர்மானிக்கிறது.



S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.04.16 17:53:04 +0530

**15) இறுதியாக,**

எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின்படி குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிக்கு ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2)–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. மேலும் காசோலையில் கண்ட தொகையான ரூ.2,80,000/த்தை இருமடங்காக (அதாவது ரூ.5,60,000/–)ஐ இந்த தீர்ப்புரை பகரப்பட்டுள்ள தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் எதிரி, புகார்தாரருக்கு கு.வி.மு.ச பிரிவு 357(3)–ன் கீழ் இழப்பீடாக கொடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தாதபட்சத்தில், இழப்பீடு செலுத்த தவறியமைக்காக 3 மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.16 17:53:12 +0530

நீதித்துறை நடுவர்–II,
ஈரோடு.

**புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:–**

பு.சா.1. – திரு.செந்தில்குமார் த/பெ.கைலாசநாதர்

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பு.சா.ஆ.1 | 01.04.022 | 12.12.2021ம் தேதியிட்ட அசல் காசோலை | – |
| பு.சா.ஆ.2 | 01.04.022 | 10.01.2022ம் தேதியிட்ட காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை | – |
| பு.சா.ஆ.3 | 01.04.022 | 10.01.2022 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீதுகள் (2 எண்ணிக்கை) | – |
| பு.சா.ஆ.4 | 01.04.022 | 12.01.2022ம் தேதியிட்ட பள்ளி முகவரியில் சார்வு செய்யப்பட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை | – |
| பு.சா.ஆ.5 | 01.04.022 | 13.01.2022 தேதியிட்ட வீட்டு முகவரியில் சார்வு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சலக உறை | – |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:– இல்லை

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.04.16 17:53:20 +0530

நீதித்துறை நடுவர்–II,
ஈரோடு.

**குறிப்பு:–**

| | |
|---|---|
| 1 | எந்தவொரு சாட்சியும் மூன்று வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 2. | இவ்வழக்கின் எதிரி குற்றவாளி என்று கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன் கீழ்தண்டனை அளித்து தீர்ப்பு வழங்கப்பட்டது. |